***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*

**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p482-491** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# தமிழர் கல்வி மரபுகள்: தொன்மையும் தொடர்ச்சியும் குறித்த வரலாற்று நோக்கு

*Tamil Educational Traditions: A Historical Perspective on Antiquity and Continuity*

**திரு. தியாகு முகிலன்,**
தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Mr. Thiagu Mughilan*,**
*Department of Tamil Studies, Faculty of Arts and Culture*
*Eastern University, Sri Lanka,*
*Mobile: +94 757500948,*
*Email: prakashmukilan080@gmail.com*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:
*prakashmukilan080@gmail.com*

**Abstract:**
This study examines the continuity, transformations, and conflicts between ancient Tamil educational traditions and contemporary learning paradigms through a historical and analytical lens. Historically rooted in Sangam literature, the Thirukkural, and religious scholarly traditions, traditional Tamil education prioritized ethical grounding, holistic humanism, social responsibility, and practical life skills. In contrast, modern educational systems emphasize outcome-based learning, student-centered frameworks, and digital modalities—ranging from hybrid platforms to artificial intelligence—which often accelerate cognitive and technical development at the expense of moral and attitudinal growth. By analyzing primary historical texts alongside modern educational data, the research investigates how this shift toward result-oriented and technological learning impacts Tamil cultural identity and social cohesion. Ultimately, the abstract underscores the necessity of a balanced pedagogical approach that integrates traditional humanistic values with modern technological advancements to ensure sustainable educational and cultural progress for future generations.

**Keywords:** *Tamil Education, Traditions, Modern Education*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் சமூகத்தின் நாகரிக வளர்ச்சியிலும் பண்பாட்டு நிலைத்தன்மையிலும் கல்வி மரபுகள் முக்கிய பங்காற்றியுள்ளன. சங்ககாலம் தொடக்கம் திருக்குறள் கல்வெட்டுகள், சைவ - சமண பௌத்த கல்விமரபுகள் வரை தமிழர் கல்வி அறநெறி வாழ்க்கைத் திறன் சமூகப் பொறுப்பு மற்றும் மனிதநேயப் பண்புகளை மையப்படுத்தியிருந்தது. ஆனால், நவீன கல்வி முறைகள் மாணவர் மையக் கற்றல் (Stulent-Comred Lewing) வகுப்பறைக் கற்றல் (Classroom Learning) இலக்கு அடிப்படையிலான கற்றல் (Tapoutcome Based Learning) அறநெறி மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியற்ற மதிப்பெண் மையக் கல்வி (Eusion-Oriented Education and the Decline of Moral and Aadinal Development) பெறுபேற்று அடிப்படையிலான சுற்றல் (Results-Based Learning). கலப்புமுறைக் கற்றல் (Hybrid Learning) இணையவழிக் கற்றல் (Online Learning) தொலைதூரக் கற்றல் (Distance Learning) மற்றும் செய்யறிவு மூலம் கற்றல் (Learning by Artificial Inic) போன்ற புதிய அணுகுமுறைகளை முன்நிறுத்துகின்றன. இவ்வாய்வு, தமிழர் தொன்மைக் கல்வி மரபுகளுக்கும் இன்றைய நவீன கல்வி முறைகளுக்கும் இடையிலான தொடர்ச்சி மாற்றம் மற்றும் முரண்பாடுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, பாரம்பரிய தமிழர்கல்வி எந்த அடிப்படைகளில் அமைந்திருந்தது நவீன கல்வி முறைகள் மாணவர்களின் அறநெறி மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியை விட இலக்கு மற்றும் பெறுபேறு மையப்படுத்தப்பட்ட கற்றலாக எவ்வாறு மாறியுள்ளன? இத்தகைய மாற்றங்கள் தமிழர் வாழ்வியலுக்கும் அடையாளப் பாதுகாப்பிற்கும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? என்பன ஆய்வு வினாக்களாக அமைகின்றன. வரலாற்று மற்றும் பகுப்பாய்வு ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வில் சங்க இலக்கியங்கள் திருக்குறள் கல்வெட்டுகள் மற்றும் பாரம்பரிய நூல்கள் முதன்மை ஆதாரங்களாகவும், சமகால கல்வியியல் நூல்கள் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையவழித் தரவுகள் துணை ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாய்வு, தமிழர்கல்வி மரபுகளின் சமூக மற்றும் பண்பாட்டு பெறுமதிகளை வெளிப்படுத்துவதோடு, நவீன கல்விச் சூழலில் மனிதநேயமும் பண்பாட்டுணர்வும் இணைந்த கல்வி அவசியத்தை வலியுறுத்துகிறது. மேலும் எதிர்காலக் கல்வி முன்னேற்றத்தில் பாரம்பரிய அறிவும் தொழில்நுட்பக் கற்றலும் ஒருங்கிணைய வேண்டிய தேவையை எடுத்துரைப்பதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

**திறவுச்சொற்கள்:** தமிழர் கல்வி மரபுகள், நவீன கல்விமுறை, மாணவர் மையக் கற்றல், இணையவழிக் கற்றல், தமிழ் வாழ்வியல்

பழந்தமிழகத்தில் கல்வியின் வளர்ச்சியும், அன்றையச் சமூகத்தில் நிலவிய மெய்யியல் கோட்பாடுகளும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டிருந்தன. பழந்தமிழ்ச் சமூகத்தின் தத்துவார்த்த அடித்தளமாக விளங்கிய பொருள்முதல்வாத மெய்யியல் சிந்தனைகள், சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பரவலான முறையிலும் தரமான வகையிலும் கல்வி பெறுவதற்கு வழிவகுத்தன. சங்க காலத்தில் கல்வி என்பது ஒரு சில பிரிவினருக்கு மட்டுமேயான முற்றுரிமையாக இருக்கவில்லை. அரசன் முதல் எளிய குடிமக்கள், ஏழைகள் முதல் செல்வந்தர்கள் மற்றும் பெண்கள் வரை சமூகத்தின் பலதரப்பட்ட மக்களும் கல்வியில் சிறந்து விளங்கியதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிய முடிகிறது.

சங்கத் தொக நூல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் இடம்பெற்றுள்ளமை. அக்காலப் பெண்களின் கல்விச் சிறப்பிற்கு மிக முக்கிய சான்றாகும். கொடுமணல், கீழடி போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கி.மு.600 ஆம் ஆண்டைச் சேர்ந்த பானை ஓடுகளிலுள்ள தமிழி (பிராமி) எழுத்துக்கள், சாதாரண மக்கள் கூட தங்களின் பெயர்களைப் பானைகளில் பொறித்து வைக்கும் அளவிற்குப் பரந்த எழுத்தறிவு பெற்றிருந்ததைத் தொல்லியல் ரீதியாக உறுதிப்படுத்துகின்றன. சங்க கால மக்கள் கல்வியை வெறும் தகவல்களின் குவியலாகப் பார்க்காமல், பகுத்தறியும் ஆற்றலை வளர்க்கும் சிந்தனைப் பயிற்சியாகக் கருதினர். நன்மை எது, தீமை எது என்று பகுத்தறிந்து உலக முன்னேற்றத்திற்குப் பங்காற்றும் நுண்ணறிவை வளர்ப்பதே கல்வியின் நோக்கமாகும். புறநானூற்றில் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” என்று பாடிய பாடல், பொருளைக் கொடுத்தும் ஆசிரியரை வழிபட்டும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. மேலும், கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே” என்ற புறநானூற்று வரிகள், பிறப்பால் ஏற்படும் சாதியப் பாகுபாடுகளைக் கடந்து கல்வி கற்ற ஒருவனைச் சமூகம் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. சங்க காலத்தில் இன்றுள்ளதைப் போன்ற நவீனக் கல்வி நிறுவனங்கள் இல்லாவிடினும், “மன்றம், “சான்றோர் அவை”, “அறம் கூர் அவையம்” போன்றவை கல்வி கற்பிக்கும் மற்றும் விவாதிக்கும் பொது இடங்களாகச் செயல்பட்டன.

**வள்ளுவம் வலியுறுத்தும் அறநெறிக் கல்வி**

திருக்குறள் பழந்தமிழரின் கல்வி அறத்திற்கு மிகச் சிறந்த இலக்கணமாகத் திகழ்கிறது. கல்வியை ஒரு மனிதனின் அகக்கண்ணாக வள்ளுவர் உருவகிக்கிறார். “கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” (குறள் 391) என்ற குறள், வெறும் வாசிப்புடன் நின்றுவிடாமல், கற்ற கல்விக்கு ஏற்றவாறு நெறிதவறாமல் வாழ்வதே கல்வியின் உண்மையான பயன் என்பதை விளக்குகிறது.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.38**

அறிவின் வளர்ச்சியை மணற்கேணிக்கு ஒப்பிட்டு, "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு (குறள் 396) என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். கல்வி என்பது அழியாத செல்வம் என்பதை, "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவ" (குறள் 400) என்பதன் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

அதேபோல், ஒரு பிறப்பில் கற்கும் கல்வியானது ஒருவனுக்கு ஏழு பிறவிகளிலும் அவனது ஆன்மாவிற்குத் துணையாக நின்று காக்கும் ஆற்றல் கொண்டது என்ற பழந்தமிழரின் மறுபிறப்புக் கோட்பாடும் திருக்குறளில் எடுத்தியம்பப்படுகிறது. கல்வி கற்ற ஒருவனுக்கு எல்லா நாடுகளும் எல்லா ஊர்களும் அவனுடைய சொந்த ஊர்களைப் போல அமையும் என்பதால், ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலத்தைக் கழிப்பது ஏன் என்ற வினாவை வள்ளுவம் எழுப்புகிறது.

**சமயக்கல்வி மரபுகள் சமண, பௌத்த, சைவ, வைணவ கல்விக்கூடங்கள்**

சங்க காலத்திற்குப் பிந்தைய தமிழகக் கல்வி வரலாற்றில் சமண மற்றும் பௌத்த சமயங்களின் வருகை ஒரு பெரும் புரட்சிகரமான காலகட்டமாகும். இச்சமயங்கள் மக்கள்மயப்படுத்தப்பட்ட கல்விக்கு வித்திட்டன.

தமிழகத்தில் இன்று நாம் கல்வி கற்கும் இடங்களைக் குறிக்கப் பயன்படுத்தும் "பள்ளிக்கூடம்" என்ற சொல் சமணப் பள்ளிகளிலிருந்தே தோன்றியது. மலைக்குன்றுகளிலும் இயற்கை குகைகளிலும் வாழ்ந்து வந்த சமண முனிவர்கள், தங்களைத் தேடி வந்த எளிய மக்களுக்கு இலவசமாகப் பாடங்களையும் மருத்துவத்தையும் போதித்தனர். அனைத்துத் தரப்பினரையும் தங்களின் பள்ளிகளில் அரவணைத்து முழு கல்வி புகட்டுவதை இவர்கள் கொள்கையாகக் கொண்டிருந்தனர். புத்தரின் "உனக்கு நீயே விளக்கு" என்ற போதனை சுயசிந்தனையை ஊக்குவிக்கும் நவீனக் கற்றல் கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

முழுமையான தமிழ்நாட்டில் ஐம்பதிற்கும் மேற்பட்உன்றணப் பள்ளிகள் இருந்ததற்கான இப்பள்ளிகளில் ஆண் தென் சான்றுகள் துறவிகளைப் போலவே பெண் துறவிகளும் ஆசிரியர்களாக இருந்து கற்பித்துள்ளனர். கல்வெட்டுகள் இவர்களை குரத்தியர் என்று குறிப்பிடுகின்றன. வட ஆற்காடு மாவட்டத்து விளாப்பாக்கம், காமராசர் மாவட்டத்துக் குறண்டி மற்றும் தென்னாற்காடு மாவட்டத்து "வேடல்" (விடால்) ஆகிய இடங்களில் சமணப் பெண் பள்ளிகள் இயங்கியுள்ளன. வேடலிலுள்ள பெண் பள்ளியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கனகவீரக் குரத்தியார் என்ற பெண்துறவி தலைமையேற்றுப் பள்ளியை நிர்வகித்து வந்துள்ளார். இக்கோயிலில் தங்கியிருந்த நானூறு பெண் துறவிகளுக்கிடையே (தபஸிகள்) ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்களையும் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதில் இப்பள்ளி முக்கிய பங்காற்றியதை முதலாம் ஆதித்த சோழனின் 14ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி. 885)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.38**

ஆவணப்படுத்தியுள்ளது.

இடைக்காலத்தில் சோழப் பேரரசின் எழுச்சியுடன் சைவ மற்றும் வைணவ சமயங்கள் புத்துயிர் பெற்றன. இக்காலத்தில் உருவான சைவ மடங்களும் வைணவக் கோயில்களும் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் அல்லாமல், மிக முக்கியக் கல்வி நிறுவனங்களாகச் செயல்பட்டன. இமடங்களில் பொதுவாக நான்கு வகையான தானங்கள் வழங்கப்பட்டன

அன்னதானம் - மாணவர்களுக்கும் ஏழைகளுக்கும் இலவச உணவு வழங்குதல்.

அபயதானம் - அடைக்கலம் தருதல்.

ஔடத்தானம் - இலவச மருத்துவச் சேவை வழங்குதல்.

சாத்திரதானம், கல்வி மற்றும் வேத நூல்களைப் பயிற்றுவித்தல். சைவ நாயன்மார்கள் நாடு முழுவதும் அலைந்து, எளிய தமிழ் இசையின் மூலம் மக்களின் உணர்வுகளைத் தூண்டி பக்திப் பேரியக்கத்தை உருவாக்கினர். சமண, பௌத்த சமயங்களின் தத்துவப் போக்குகளுக்கு மாற்றாக, மக்களின் அன்றாட வாழ்வியல் தேவைகளுடன் தொடர்புடைய தமிழ்மொழிக் கல்வியை மடங்களின் வாயிலாக வளர்த்தெடுத்தனர். இடைக்காலச் சோழ மன்னர்கள் மற்றும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கல்வித்துறை அரசு ஆதரவுடன் நிறுவனமயப்படுத்தப்பட்டது. பல்லவர் மற்றும் சோழர் காலத்திய கல்வெட்டுகள் அக்காலத்தில் செயல்பட்ட பிரம்மாண்டமான உயர்கல்விக்கூடங்கள், அவற்றின் நிர்வாக முறைகள் மற்றும் பாடத்திட்டங்கள் குறித்த மிகத் துல்லியமான விபரங்களைத் தருகின்றன.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தாலுக்காவிலுள்ள எண்ணாயிரம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் இராசேந்திர சோழனின் கி.பி. 1025ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு சோழர் காலக் கல்வி நிர்வாகத்தின் உச்சத்தை விளக்குகிறது. இராசேந்திர சோழன் சோழன் எண்ணாயிரத்திலிருந்த உயர்கல்விக் கூடத்தின் (வேதக் கல்லூரி நிர்வாக மற்றும் உறைவிடச் றவிடச் செலவினங்களுக்காக 45 வேலி (அதாவது சுமார் 247.5 ஏக்கர்) நிலத்தை சாலாபோகமாக மானியமாக எழுதி வைத்துள்ளான். இக்கல்விக் கூடத்தில் பயின்ற மாணவர்களுக்கும் போதித்த ஆசிரியர்களுக்கும் இலவச உணவு, உறைவிடம் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டதை இக்கல்வெட்டு விவரிக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் வேங்கடேசப் பெருமாள் கோயிலில் உள்ள வீரராஜேந்திர சோழனின் 55 வரிக் கல்வெட்டு சோழர் காலக் கல்வியோடு இணைந்த மருத்துவச் சேவையைப் பதிவு செய்துள்ளது. இக்கோயில் வளாகத்தில் மாணவர்களுக்கான அறச்சாலை (உறைவிடக் கல்லூரி) மற்றும் ஆதுலர் சாலை எனப்படும் இலவச மருத்துவமனை இயங்கி வந்தன. இங்கு தங்கியிருந்த மாணவர்கள் மற்றும் நோயாளிகளுக்குத் தினமும் வழங்கப்பட்ட அரிசி, பருப்பு,

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.38**

நெய், உப்பு ஆகியவற்றின் அளவுகளும், மருந்துகளைத் தயாரிக்கும் முறைகளும், அங்கு பணிபுரிந்த பொது மருத்துவர். துணை மருத்துவர் மற்றும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விவரங்களும் இக்கல்வெட்டில் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

பாண்டிய மற்றும் ஆய் மன்னர்களின் எல்லையில் செயல்பட்ட சாலைகள் என்பவை இன்றைய குடியிருப்புப் பல்கலைக்கழகங்கள் (சுநளனைநவெயைட ருniஎநசளவைநைள) மற்றும் இராணுவப் பயிற்சி நிலையங்களின் கல்வையாகத் திகழ்ந்தன. ஆய் மன்னன் கோகருந்தடக்கனின் பார்த்திவசேகரபுரம் செப்பேடு (கி.பி. 866) இத்தகைய கல்விச் சாலைகளின் உள் கட்டமைப்பைத் துல்லியமாக விளக்குகிறது. பார்த்திவசேகரபுரம் சாலையானது காந்தளூர்ச் சாலையை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. மன்னன் முன்சிறை என்ற ஊர்ச்சபையினரிடம் நிலங்களை விலைக்கு வாங்கி, அங்கு கோயில் ஒன்றை நிறுவி, அத்தோடு இணைந்த இக்கல்விச் சாலையை உருவாக்கினான். இச்சாலையில் தங்கிப் பயின்ற மாணவர்களுக்கு சட்டர்கள் என்று பெயர். பார்த்திவபுரம் சாலையில் தங்கிப் பயில் 95 இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவற்றில் பாடத்திட்ட வாரியாகப் பிரிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

14 இங்கு பயின்ற மாணவர்களுக்கு வேத நூல்களுடன் சிவில் நிர்வாகம், அரசியல் நெறிமுறைகள், வர்மக் கலை, அடிமுறை போன்ற போர்க்கலைகளும் கற்பிக்கப்பட்டன. இதனால் இவர்கள் அரசுகளிடம் பெரும் பதவிகளைப் பெறும் தகுதியைப் பெற்றனர். இராஜராஜ சோழனின் கல்வெட்டுகளில் காணப்படும் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய என்ற அடைமொழி வரலாற்று ஆய்வாளர்களிடையே பெரும் விவாதப் பொருளாகவே உள்ளது. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி போன்றோர் இதனை இராணுவப் போரின் வெற்றியாகக் கருத தொல்லியல் அறிஞர் டி.ஏ. கோபிநாத ராவ் மற்றும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை போன்றோர் காந்தளூர் அறச்சாலையில் சோறு அட்டுவதையும், மாணவர்களுக்கான உணவுப் பங்கீட்டையும் (கலம்) அரசன் முறைப்படுத்தியதையே இச்சொற்றொடர் குறிக்கிறது என்று விளக்கியுள்ளனர்.

**நவீன கல்விப் போக்குகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள்**

ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பிறகு, மெக்காலே கல்வி முறையின் வழியே மதச்சார்பற்ற, அறிவியல் பூர்வமான நவீனக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கல்வி முறை பரவலான கல்விச் செல்வத்தை அனைவருக்கும் பொதுவாக்கிய போதிலும், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தீவிரத் தொழில்நுட்பப் பாய்ச்சல் கல்வி முறையில் புதிய சவால்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் கற்பித்தல் முறையில் "மாணவர் மையக் கற்றல்" (Student-Centred Learning) முதன்மை பெற்றுள்ளது. இம்முறை மாணவர்களை வெறுமனே தகவல்களைப்

| Copyright © Author(s)

பெறும் செயலற்ற நிலையிலிருந்து மாற்றி, அறிவைக் கட்டமைக்கும் சுறுசுறுப்பான பங்கேற்பாளர்களாக மாற்றுகிறது.

இருப்பினும், நடைமுறையில் தமிழ்நாட்டுப் பள்ளி ஆசிரியர்கள் இம்முறையைச் செயல்படுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆசிரியர்களுக்கான கூடுதல் எழுத்துப் பணிகள் (Clerical Work), தேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை மற்றும் போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை (இணைய இணைப்பு மற்றும் ஆய்வகக் குறைபாடுகள்) போன்றவை மாணவர் மையக் கற்றலின் நோக்கத்தைச் சிதைக்கின்றன.

நவீனக் கல்வியானது ஒரு குறிப்பிட்ட வேலைவாய்ப்பையோ அல்லது குறிப்பிட்ட பொருளாதாரத் தகுதியையோ அடைவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற நாடுகளின் உயர்கல்வித்துறையில் 2022 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட விளைவு (Outcome-Based Learning -OBL) இதற்குச் சான்றாகும்.

மதிப்பீட்டுத் திட்டங்களில் இப்புதிய முறை பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தாலும், கல்வி என்பது ஒரு மனிதனை மனிதநேயம் மிக்கவனாக மாற்றுவதை விடுத்து, சந்தைக்கான உழைப்பாளியாக மட்டுமே மாற்றும் வணிகக் கருவியாகச் சுருங்கிவிட்டது என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

கொரோனா பேரிடருக்குப் பிந்தைய கல்விச் சூழலில் இணையவழிக் கற்றலும் (Online Learning) கலப்புமுறைக் கற்றலும் (Hybrid Learning)) இயல்பானவையாக மாறிவிட்டன. தொடக்கக் கல்வி மட்டத்தில் தமிழ் மாணவர்களின் பேசும் திறனை மேம்படுத்த கனிமணி (KM-SMA) போன்ற மொபைல் செயலிகள் பயன்படுத்தப்படுவது போன்ற நேர்மறைத் தொழில்நுட்ப மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. அதே நேரத்தில், செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் அறிமுகம் கல்வித் துறையில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களின் கற்றல் திறனை நிகழ்நேரத்தில் ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்கத்தை AI வழங்குகிறது. இருப்பினும், AI தொழில்நுட்பம் மாணவர்களின் சுயசிந்தனையையும் படைப்பாற்றலையும் மழுங்கடிக்கச் செய்கிறது. ரோபோக்களுக்கு மனித உணர்ச்சிகள் இல்லாததால் மாணவர்களுக்குத் தேவையான மனப்பாங்கு வளர்ச்சியையும் அறநெறிப் பண்புகளையும் அவைகளால் போதிக்க முடியாது.

**ஒப்பீட்டுப் பகுப்பாய்வு**

தமிழரின் பாரம்பரியக் கல்வி முறையானது அகவாழ்வின் மேன்மையையும் சமூக அறத்தையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைய நவீனக் கல்வி முறை புறவாழ்வின் நுகர்வுத் தேவைகளையும் பொருளாதார முன்னேற்றத்தையும் மட்டுமே இலக்காகக் கொண்டுள்ளது.

இவ்விரண்டு கல்விப் போக்குகளுக்கு இடையிலான கட்டமைப்பியல் வேறுபாடுகள் அட்டவணை 3 இல் விளக்கப்பட்டுள்ளன.

| **ஒப்பீட்டுக் காரணி** | **மொழி மற்றும் பண்பாடு** | **நவீன மற்றும் தொழிநுட்ப கல்வி** |
|---|---|---|
| தத்துவ அடித்தளம் | அறநெறி, ஆன்மீக பொருள் முதல் வாசத பகுத்தறிவு மற்றும் சமூக கடமை | பயன்பாட்டு வாதம், சந்தைப் பொருளாதாரம் மற்றும்அதனிநபர் நுகர்வு |
| கற்பித்தல் மையம் | ஆசிரியர் மற்றும் குருவின் வழிகாட்டல், நேரடி வாழ்வில் கவனிப்பு | மாணவர் மையக்கற்றல் மற்றும் தொழிநுட்ப வழிதுறை |
| மதிப்பீட்டு முறை | வாழ்வியல் சோதனை. சமூகப் பங்களிப்பு மற்றும் ஒழுக்க மேம்பாடு | தேர்வு அடிப்படையிலான மதிப்பெண் மற்றும் பெறுபெறு அளவீடு |
| சமூக நோக்கு | சாதி – வருணக் கட்டுப்பாடுகளை கடந்து மனிதநேய ஒழுக்கத்தை நிலை நிறுத்தல் | வேலைவாய்ப்பு திறனை வளர்த்தல் மற்றும் உலகலாவிய போட்டியை எதிர் கொள்ளல் |
| கற்றல் பரப்பு | திண்ணை பள்ளிகள், குகைகள், கோயில்கள் மற்றும் மடங்கள். | டிஜிட்டல் வகுப்பறைகள், இணையவழிச் செயலிகள் மற்றும் AI மெய்நிகர் கூடங்கள் |
| மொழி மற்றும் பண்பாடு | தாய்மொழி வழி அறிவியல் மற்றும் தத்துவக் கல்வி | உலக மயமாக்கப்பட்ட மொழி மற்றும் பன்னாட்டு பாடத்திட்டங்கள். |

(ஆய்வுக்காக ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது – 2026)

**முடிவுரையும் எதிர்கால நோக்கும்**

தமிழர் கல்வி மரபுகளின் வரலாற்றுப் பயணத்தை ஆராயும்போது, அவை மனிதனின் அகவாழ்வையும் புறவாழ்வையும் சமநிலைப்படுத்தும் ஒரு முழுமையான வாழ்க்கைக் கல்வியை வழங்கின என்பது தெளிவாகிறது. பழந்தமிழ்ச் சமூகத்தில் நிலவிய பரவலான எழுத்தறிவும், சமணப் பள்ளிகளால் தோற்றுவிக்கப்பட்ட கல்விச் சமத்துவமும், சோழர் கால உயர்கல்விச் சாலைகளின் உன்னத நிர்வாக முறைகளும் தமிழர்களின் கல்விச் சிந்தனைக்குச் சிறந்த வரலாற்றுச் சான்றுகளாகும்.

இருப்பினும், சமகால உலகமயமாக்கல் சூழலில் நாம் எதிர்கொள்ளும் நவீனக் கல்வி முறைகளும், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பப் பாய்ச்சல்களும் மாணவர்களின் தகவல் பெறும் ஆற்றலை வளர்த்த அளவிற்கு அவர்களின் ஆன்ம ஒழுக்கத்தையும் அறநெறி விழுமியங்களையும் சிதைத்துவிட்டன. கல்வி என்பது வெறும் பொருளாதார இலக்குகளையும், மதிப்பெண் பெறுபேறுகளையும் மட்டுமே அடையும் வணிகக் கருவியாக மாறிவருவது தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது.

எதிர்காலக் கல்வி வளர்ச்சியில், நாம் நவீனத் தொழில்நுட்ப அறிவையும் உலகளாவிய அறிவியல் சிந்தனைகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பழந்தமிழர் கல்வி மரபுகள் நமக்குக் கற்றுத்தந்த அறநெறி. தனிமனித ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற மனிதநேய விழுமியங்களையும் ஒருங்கிணைக்க வேண்டும். அத்தகைய ஒரு கலப்பு மற்றும் சமநிலைக் கல்வி முறையாலேயே (Hybrid Humanistic Education) ஒரு சிறந்த, அமைதியான மற்றும் முற்போக்கான தமிழ்ச் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.38**

**உசாத்துணை**


[1]. நெடுஞ்செழியன், க. (2009). தமிழர் இயங்கியல் தொல்காப்பியமும், சரக சம்கிதையும். பாவை பதிப்பகம்.

[2]. பழனிவேலு, ஞா. (2024). இலங்கையில் தமிழ்மொழிக் கல்வியின் நோக்கும் போக்கும். தமிழ்ப் பேராய்வு.

[3]. பழனிவேலு, ஞா, (2024) இலங்கையில் தமிழ்மொழிக் கல்வியின் நோக்கும் போக்கும். தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், 14(2), 112-128.

[4]. மத்திய தொல்லியல் . (1915). திருமுக்கூடல் வேங்கடேசப் பெருமாள் கோயில் கல்வெட்டறிக்கை (வரிசை எண் 167-188). தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 30. , (2010).

[5]. Ministry of Education, Sri Lanka (2020). e-Thaksalawa: National e-Learning Portal for General Education. Available at: https://www.ethaksalawa.moe.gov.lk/ [Accessed 15 Sep. 2026].

[6]. Perera, H.M. (2022). Digital Transformation in Sri Lankan Education: Challenges and Opportunities in Online Learning Platforms. Colombo: National Institute of Education.

[7]. Wijesinghe, A. (2024). 'Integration of Learning Management Systems (LMS) in National Schools and Teacher Training Colleges', Journal of Educational Technology and Policy, 12(3), pp. 45–60.

[8]. Gunawardena, S. (2021). Information and Communication Technology in Sri Lankan Schools: Policy, Implementation and Future Directions. Kandy: Postgraduate Institute of Education.

[9]. Jayasuriya, K. (2023). 'The Role of Digital Repositories in Enhancing Self-Directed Learning Among Secondary School Students in Sri Lanka', Sri Lankan Journal of Educational Research, 18(2), pp. 112–128.

[10]. National Institute of Education (2019). National Policy on ICT in Education. Maharagama: NIE.


இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*